# மூப்பர்களுக்கும், சிறு குழு தலைவர்களுக்கும், வாரந்தோறும் நடவடிக்கைகளை தலைமை ஏற்று நடத்துவோர்களுக்கும் உரிய வழிகாட்டுதல்கள்.

## ஆரம்பித்தல்

Download Paul-Timothy studies freely from www.paul-timothy.net

ஜெபம்: "கர்த்தாவே, அப்போஸ்தலர் நடபடிகளில் சபைகளுக்கு நீர் அளித்த அதே வல்லமையை, எங்கள் சபையும் ஊழியங்களை வளர்ப்பதற்காக தந்தருளி, அவர்களைப் போலவே நாங்களும் சேவை செய்ய எங்களுக்கு உதவும்."

ஒருவருக்கொருவர் உதவி செய்யவும், சமுதாயத்தில் உறுப்பினர்களுக்கு உதவி செய்யவும் விசுவாசிகள் வாரந்தோறும் அடிக்கடி சந்திக்கின்றனர். அவர்கள் மக்களுக்காக ஜெபிக்கிறார்கள். சீஷர்களை உருவாக்குகிறார்கள். பல்வேறு ஊழியங்களை நடத்துகிறார்கள். சில வேளைகளில் ஆண்கள் அல்லது பெண்கள் குழுவாகக் கூடுகின்றனர். பெரிய குடும்பங்கள் அல்லது இரண்டு மூன்று குடும்பங்கள் குடும்ப ஆராதனைக்காக ஒன்று கூடுகிறார்கள். மூப்பர்கள் சில வேளைகளில் இந்த கூட்டங்களுக்கு தலைமை ஏற்று அந்தந்த வாரத்தில் நடைபெறும் காரியங்களை மேற்பார்வை செய்கின்றனர். தேவையில் உள்ள மக்களுக்கு சேவை செய்யும் குழுக்களை பெரும்பாலும் மூப்பர்கள் வழிநடத்துகின்றனர்.

1. **தேவையில் இருப்போரை கவனிக்கும் வேலைகளை வழிநடத்தவும், அந்தந்த வாரத்தில் விசுவாசிகள் ஆற்றும் நடவடிக்கைகளுக்கு உதவவும் ஆண்பெண் மூப்பர்களை நியமிக்கவும்.**

- ஆண் அல்லது பெண் மூப்பர்களை தேர்ந்தெடுக்க 1 தீமோத்தேயு 3:8-13ல் கூறப்பட்ட வழிமுறைகளை கண்டுணர்க.
- அப்போஸ்தலர்கள் செய்தது போல மூப்பர்கள் மேல் கைகளை வைக்கவும். அவர்களை அபிஷேகம் செய்யும்படி பரிசுத்த ஆவியானவரை வேண்டிக் கொள்ளுங்கள்.
- எந்த விசுவாசிக்கும் அவசரமான தேவைகள் உண்டு என்பதைக் கண்டறியவும். சபைக்கு வெளியில் இருப்போர்களுக்கும் இது போல் செய்க.
- இந்தத் தேவைகளை சந்திக்க பணம், நேரம், உதவி, அல்லது பொருட்களைத் தருமாறு விசுவாசிகளைக் கேட்கவும்.
- அப்போஸ்தலர் 6:1-7 ஐ வாசித்து எருசலேமில் மூப்பர்கள் செய்ததை கண்டறிக.
- மூப்பர்களை நியமிக்கும்படி புதிய சபைகளுக்கு ஏற்பட்ட தேவை என்ன?
- மூப்பர்களாக நியமிக்கப்பட்டு ஏழை விதவைகளுக்கு சேவை செய்ய ஒருவருக்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும்?
- ஞானத்தாலும் பரிசுத்த ஆவியாலும் நிறைந்தவர்களை நியமித்தபோது நிகழ்ந்த விளைவு என்ன? (வசனம் 7ல் இதற்கான பதிலைக் காண்க).
- ரோமர் 16:1, பெபேயாள் என்ற பெண் சபையின் வேலையாளாகிய 'மூப்பர்' என்று அழைக்கப்பட்டதை வெளிப்படுத்துகிறது.
- வேதாகமம் 'மூப்பர்' என்ற பதத்திற்கு 'வேலையாள்' என்று அர்த்தம் கூறுகிறது.

2. **வரும் வாரத்தில் உங்களோடு உடன் பணியாற்றுவோரும் செய்ய வேண்டிய காரியங்களைத் திட்டமிடுங்கள்.**

ஆராதனையில் போதிக்கப்பட்டவைகளுக்கு ஏற்ப அந்த வாரத்தின் வேலைகளைச் செய்ய புதிய மேய்ப்பனின் ஒவ்வொரு பாடத்தின் இரண்டாவது பாகத்தில் அந்தந்த வாரத்தில் உடன் வேலையாட்களுடன் சேர்ந்து செய்ய வேண்டிய நடவடிக்கைகளை திட்டமிடுதல் என்றோ அல்லது அது போன்ற வேறு தலைப்பிலோ காணலாம்.

நீங்களும் உங்கள் உதவியாளர்களும் செய்யக் கூடிய செயல்பாடுகளை ஒவ்வொரு பாடமும் பட்டியல் இடுகிறது. உங்கள் விசுவாசிகளின் தேவைக்கேற்ற எதையாவது ஒன்றை தெரிந்து கொள்ளவும். மற்ற செயல்பாடுகளை புறக்கணித்து விடவும்.

உங்களோடு பணிபுரிபவர்களுடன் இந்த நடவடிக்கைகளைத் திட்டமிடுங்கள். அடுத்த முக்கிய ஆராதனைக்கு முன்னரே இதை செய்துவிட வேண்டும். ஏனெனில் ஆராதனையின் போது என்ன செய்யப்பட வேண்டும் என்பதை மக்களுக்கு விளக்கிக் கூற முடியும்.

உங்கள் திட்டங்களை தாளில் எழுதுங்கள். பின் உங்கள் சபை மேய்ப்பருடன் கலந்து ஆலோசிக்கவும். அடுத்த வார ஆராதனை மற்றும் செயல்பாடுகள் குறித்து திட்டமிடக் கூடும்போது அவருடனும் மற்ற தலைவர்களுடனும் ஒன்றாக அமர்ந்து இத்திட்டங்களைத் தீட்டுங்கள். அடுத்த சபை ஆராதனையில் உங்கள் திட்டங்களை அறிவிக்குமாறு ஏற்பாடு செய்யுங்கள். யார் யார் எதை எப்போது எங்கு செய்ய வேண்டும் என்பதை இந்த ஆலோசனைக் கூட்டத்தில் முடிவெடுத்து திட்டங்களைப் பூர்த்தி செய்யவும். திட்டவட்டமான முடிவுகளை எடுக்க வேண்டும். உங்கள் திட்டங்கள் பின்வரும் செயல்பாடுகளில் எதையாவது ஒன்றைக் கொண்டதாக அமையலாம்.

- கலாத்தியர் 6:10 கூறுவது போல கிறிஸ்துவின் சரீரமாகிய அங்கத்தில் ஒருவருக்கொருவர் சேவை செய்ய வேண்டும்.
- எபேசியர் 5:21-6:4 அறிவுறுத்துவது போல நமது குடும்பங்களுக்கும் சேவை செய்ய வேண்டும்.
- அப்போஸ்தலர் 15:40-41 ல் பவுல் செய்தது போல பிற சபைகளோடு ஒத்துழைக்க வேண்டும்.
- இயேசு மத்தேயு 5:13-14; 25:31-46 ல் கட்டளை இட்டது போல நமது நண்பர்களுக்கும், அயலகத்தாருக்கும், எதிரிகளுக்கும், நம்மை சுற்றி இருக்கும் சமுதாயத்திற்கும் சேவை செய்ய வேண்டும்.
- 2 தீமோத்தேயு 2:2 ல் பவுல் தீமோத்தேயுவுக்குக் கூறியது போல உங்களோடு சேர்ந்து சேவைபுரிய மற்றவர்களையும் ஆயத்தப்படுத்துங்கள்.
- செய்ய வேண்டியவை பிற விஷயங்களையும் திட்டமிடவும்.

Copyright © 2003 by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net